**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ஆம் நாள் செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| 26.02.13 | **வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டு வரப்படும் சிறப்புத் தீர்மானம்**<br>தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சனையான காவேரி நதிநீர் பங்கீடு தொடர்பாக 22 ஆண்டுகள் மத்திய அரசினை வலியுறுத்தியும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட உச்ச நீதிமன்றம் சென்று தமிழகத்தின் நிலையினை தெரிவித்து, தமிழ்நாட்டிற்கு ஆண்டுதோறும் 419 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடக அரசு வழங்க வேண்டும் என்ற காவேரி நதிநீர் நடுவர் மன்றம் தெரிவித்த இறுதி தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து தமிழகத்தின் இழந்த உரிமையை மீட்டுத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. | 30) ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது |
| 26.02.13 | 1. இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்களின் கீழ் மாமன்றத் தீர்மானம் எண் 277 நாள் 24.12.2012 அனுமதிக்கப்பட்ட 32 இனங்களுக்கு 21.02.2013ல் பொது ஏலம் நடத்தப்பட்டதிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் கீழ்க்கண்ட விபரப்படி மாநகராட்சி மூலம் குறைந்த பட்ச ஏலத்தொகை நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டதில் கீழ்க்கண்ட 10 இனங்கள் மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு மேல் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | 31) அலுவலகக் குறிப்புப்படி உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களுக்கு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண் | ஏல இன எண் | ஏல இனம் | பெயர் மற்றும் முகவரி | குறைந்த பட்ச தொகை ரூ. | கோரப்பட்ட ஒப்பந்தப்புளி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 16 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் 'பூ' தலை.சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | ஏ.முத்துகுமார், த/பெ.எஸ்.அரியநாயகம் 471/1, கிருஷ்ணராஜபுரம்.<br>எஸ். ஜெயபால் த/பெ. எஸ்.சண்முகவேல் 220, முத்து தெரு. | 20000/– | 20000/–<br>21000/– |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | 18 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் 'செய்தித்தாள்' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | ஏ.ஜெகன் அருள்<br>த/பெ.அந்தோணிதாசன்<br>8/257ஏ,ஆரோக்கியபுரம்<br>என்.செந்தில் ஆறுமுகம்<br>த/பெ. நடராஜன்<br>96, யாதவர் தெரு | 38000/– | 37000/–<br><br>38500/– | |
| | | 3 | 19 | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் 'செய்தித்தாள்' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | கே.பொம்மு ஆனந்த்,<br>த/பெ. கண்ணன்<br>40சி, அழகேசபுரம்<br>எஸ். சங்கரராமன்,<br>த/பெ. சுப்பிரமணியன்,<br>61ஏ/3பி/1, போல்பேட்டை | 23000/– | 22000/–<br><br>24000/– | |
| | | 4 | 22 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக் கொள்ளும் உரிமை | இ. ராஜா,<br>த/பெ. டி.எபனேசர்<br>145ஏ/5 தாமோதரநகர்<br>இ.ரவிக்குமார்,<br>த/பெ. டி.எபனேசர்<br>145ஏ/5, தாமோதரநகர்<br>என்.சி. சேர்மபாண்டி<br>த/பெ.என்.செல்லத்துரை நாடார், 7,தாமோதரநகர் | 6000/– | 6050/–<br><br>5500/–<br><br>5500/– | |
| | | 5 | 23 | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக் கொள்ளும் உரிமை | இ.ராஜா, த/பெ.எபனேசர்<br>145ஏ/5, தாமோதர நகர்<br>இ.ரவிக்குமார்,<br>த/பெ. டி.எபனேசர்<br>145ஏ/5, தாமோதரநகர்<br>என்.சி. சேர்மபாண்டி<br>த/பெ.<br>என்.செல்லத்துரை<br>நாடார்,<br>47,தாமோதரநகர் | 8000/– | 7700/–<br><br>8100/–<br><br>7200/– | |
| | | 6 | 24 | பழைய பேருந்து நிலையத்திலுள்ள தங்கும் விடுதியின் கட்டணம் வசூல் செய்யும் உரிமை | கே.லிவிங்ஸ்டன்<br>த/பெ. கோவில்பிள்ளை<br>8/278, ஆரோக்கியபுரம்<br>பி.ஜே.அற்புதராஜ்<br>த/பெ. பாலசுந்தர் நாடார்<br>9, அண்ணாநகர் 3. | 200000/– | 202000/–<br><br>190000/– | |
| | | 7. | 27 | சத்திரம் தெருவிலிருக்கும் அறிஞர் அண்ணா திருமண மண்டபம் | எஸ். சொக்கலிங்கம்,<br>த/பெ. சுயம்புலிங்கநாத பிள்ளை,<br>111/2ஜி/ஏ1,போல்பேடடை<br>1 , கே. பாலசுப்பிர–மணியன்<br>த/பெ. கே.எஸ்.கந்தசாமி<br>177, முத்து தெரு | 700000/– | 705000/–<br><br>685000/– | |
| | | 8 | 28 | புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி பகுதியில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் | எஸ்.ஆர்.பெனில்டஸ்<br>த/பெ. எஸ்.ஆர்.ராபர்ட்<br>25ஏ, பிரையண்ட்நகர்<br>எஸ். சொக்கலிங்கம்<br>த/பெ.சுயம்புலிங்கநாத பிள்ளை | 240000/– | 243000/–<br><br>242000/– | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | உரிமம் (1 முதல் 7 வரை, 33 முதல் 39 வரை, 41 முதல் 44வரை மற்றும் 46 முதல் 49 வரை உள்ள வார்டுகள்) | 111/2ஜி/ஏ1,போல்பேட்டை 1 | | |
| 9. | 29 | வ.உ.சி சந்தையில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் (வார்டு எண் 25 முதல 33 வரை, 40, 45, 50 முதல் 60 வரை) | எஸ்.ஆர்.பெனில்டஸ், த/பெ. எஸ்.ஆர்.ராபர்ட் 25ஏ, பிரையண்ட்நகர்<br>எஸ். சொக்கலிங்கம் த/பெ.சுயம்புலிங்கநாத பிள்ளை 111/2ஜி/ஏ1,போல்பேட்டை 1 | 100000/– | 102500/–<br>100000/– |
| 10. | 30 | எஸ்.எஸ். தெருவிலிருக்கும் தினசரி சந்தையில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் (வார்டு எண் 8 முதல் 24 வரை) | ஜே.பெரியராஜ் த/பெ. ஏ.ஜெபமணி 37ஏ, டூவிபுரம்<br>எஸ். காஜாமைதீன் த/பெ. எஸ்.சம்சுகனி 256ஏ, மீகா. தெரு | 100000/– | 102000/–<br>90000/– |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

மேற்கண்ட 10 இனங்களின் உரிமம் வழங்கக் கோரி ஒப்பந்தப்புள்ளி கோரியவர்களில் பட்டியலில் கோரியவர்களில் பட்டியலில் கண்டுள்ள நபர்களில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரியவருக்கு மூன்றாண்டு (2013–2016) தொகுப்பு அடிப்படையில் 2013–14 ஓராண்டுக்கு உரிமம் வழங்குவது குறித்து மன்றம் பரிசீலனை செய்யலாம்.

அ16/20353/12

2. இம்மாநகராட்சியில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்கள், பேருந்து நிலையங்கள், பொது கழிப்பிடங்கள் அலுவலக கழிப்பிடங்கள், மழைநீர் தேங்கி அப்புறப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் குப்பை தொட்டிகளின் சுற்று வட்டார பகுதிகளில் தொற்றுநோய் கிருமிகள் பரவா வண்ணம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பு செய்வது மிகவும் அத்தியாவசியமானதாகும். எனவே மேற்படி பணிகளுக்கு சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர் மற்றும் கருப்பு பினாயில் போன்ற கிருமி நாசினிகள் கூட்டுறவு சங்கம் மூலம் வாங்கி பயன்படுத்திக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.

எச்2/920/13

32) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

3. இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து பணியிடையில் காலமான கீழ்க்கண்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு அன்னார்களின் வாரிசுகளுக்கு வழங்க வேண்டியுள்ளது.

33) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | துப்புரவு பணியாளர் பெயர் | காலமான தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி. பாப்பா/ முத்துவீரன் இறப்பு | 03.11.2012 | 2960/– |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு பணியாளராக பணிபுரிந்து பணியிடையில் காலமான அன்னாரின் வாரிசுதாரருக்கு மேற்கண்ட தொகையினை, மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்2/386/2013

---

4. இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்குகின்ற நகர்நல மையங்களில் பணிபுரிந்து 31.07.2012 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்கண்டுள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டு தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.

34) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | துப்புரவு பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை | வட்டி |
|---|---|---|---|---|
| 1. | லெட்சுமி/ சோனையன் | 31.07.12 | 2960/– | 13870/– |
| 2. | கணேசன் / நல்லான் | 31.07.12 | 2960/– | 13870/– |
| 3. | சந்தனம்/மலையாண்டி | 31.07.12 | 2960/– | 13870/– |
| 4. | ஆத்தியப்பன்/ஆத்திக்கண் | 31.07.12 | 2960/– | 13870/– |
| 5. | லெட்சுமணன் / இருளப்பன் | 31.07.12 | 2960/– | 13870/– |
| | மொத்தம் | | 14800/– | 69350/– |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை, மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்2/16281/2012

---

5. இம்மாநகராட்சி வி.எம்.எஸ். நகர் நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்படும் குடிநீரை அளவிட புதிய அளவு கருவி பொருத்தவும் மேற்படி அப்பகுதி பகிர்மான குழாய்களில் வால்வுகள் பொருத்தவும் மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 18,298 செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

35) பதிவு செய்யப்பட்டது

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம்.

மதிப்பீடு எண் 273/12–13

---

6. இம்மாநகராட்சி வார்டு எண். 3, மில்லர்புரம் நீர்த்தேக்க தொட்டியிலிருந்து பால்பாண்டி நகர், ராஜீவ் நகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ள செயல்பட்டு வரும் வால்வுகள் பழுதடைந்து குடிநீர் வீணாவதை சரி செய்ய மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ.19000 செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

36) பதிவு செய்யப்பட்டது

**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் பதிவு செய்யலாம்.

மதிப்பீடு எண் 274/12–13

---

7. இம்மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள 28 இண்டர்காம் மற்றும் EPABX சிஸ்டத்தில் இணைக்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புகளுக்கு 2012–13ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கு மெசர்ஸ் எஸ்ஸார் மார்க்கெட்டர்ஸ், திருநெல்வேலி நிறுவனத்தினர் கொடுத்துள்ள மிகக்குறைந்த விலைப்புள்ளி தொகை ரூ.20500/–ஐ ஏற்றுக்கொள்வதற்கு இம்மாமன்றம் தனது தீர்மானம் எண் 11 நாள் 31.01.12ல் அனுமதி வழங்கியதன் பேரில், மேற்படி

37) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | நிறுவனத்தினருக்கு வேலை உத்திரவுவழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றது.<br><br>தற்பொழுது மேற்படி நிறுவனத்தினர் மேற்படி வருடாந்திரப் பராமரிப்பு பணிக்காலம் 14.02.2013ம் தேதியுடன் நிறைவு பெறுவதால் அதனை மேலும் ஓராண்டு நீடித்து பராமரிப்பு பணி மேற்கொள்ள புதிய உத்திரவு பிறப்பிக்குமாறும், கடந்த வருடம் பராமரிப்பு தொகை ரூ.20500/—ஐ இந்த வருட பராமரிப்பு பணிக்கும் வழங்குமாறும், 21.01.2013ம் தேதிய இவ்வலுவலகத்துக்கு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.<br><br>எனவே, மெசர்ஸ் எஸ்ஸார் மார்க்கெட்டர்ஸ் நிறுவனத்தினருக்கு தொலைபேசி உள் இணைப்புகளின் வருடாந்திரப் பராமரிப்பு பணிக்கு கடந்த வருடம் வழங்கப்பட்ட தொகை ரூ.20500/—ஐ, இந்த வருட (2013—14) வருடாந்திரப் பராமரிப்பு பணிக்கு வழங்குவதற்கும், புதிய வேலை உத்திரவு வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/16243/11 | |
| | 8. | இம்மாநகராட்சி பகுதி ஸ்டேட்பாங்க் காலனியில் உள்ள மகப்பேறு நல மையத்தில் கணினி இயந்திரம் வைத்து Server உடன் இணைத்து செயல்பட வைப்பதற்கு தேவைப்படும் Lease Line Connection—ஐயும், தூத்துக்குடி மாவட்ட அரசு மருத்துவமனை அருகில் உள்ள சுகாதாரப்பிரிவு அலுவலகத்தில் கணினி இயந்திரம் வைத்து Server உடன் இணைத்து செயல்பட வைப்பதற்கு தேவைப்படும் Lease-Line Connection—ஐயும் மெசர்ஸ் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்தினரிடமிருந்து பெற வேண்டியுள்ளது. மேற்படி நிறுவனத்தினர் மகப்பேறு நல மைய கணினி இயந்திர செயல்பாட்டிற்கு தேவைப்படும் Lease Line Connectionஐ பெறுவதற்கு உரிய கட்டணத் தொகை ரூ.38105/—க்கும், சுகாதாரப் பிரிவு அலுவலக கணினி இயந்திர செயல்பாட்டிற்கு தேவைப்படும் Lease-Line Connection—ஐ பெறுவதற்கு உரிய கட்டணத் தொகை ரூ.34504/—க்கும் தனித்தனியே கேட்பு அறிவிப்பினை (Demand Note) இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>எனவே மேற்படி இரண்டு கேட்பு அறிவிப்புகளில் உள்ள கட்டணத் தொகைகளைச் சேர்த்து வரும் மொத்த தொகை ரூ.72609/—ஐ மெசர்ஸ் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்தினருக்கு வழங்குவதற்கும் மேற்படி நிறுவனத்தினரிடமிருந்து மேற்படி Lease Line Connection—களைப் பெறுவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/694/13 | 38) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 9. | தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியான ரோச் பூங்காவில் பொதுமக்கள் மாலை நேரத்தை பயன் உள்ளதாக கழிக்கவும், நகரினை அழகுபடுத்தும்விதமாகவும், படகு குழாம் அமைக்கும் பணிக்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மாமன்றம் தனது தீர்மானம் எண் 58, நாள் 30.03.2012இல் சுற்றுலா துறை மூலம் அரசு மான்யம் பெற்று செயல்படுத்த அனுமதி அளித்துள்ளது.<br><br>இந்நிலையில் மேற்கண்ட பணியில் பொதுமக்கள் தங்கும் அறை, வரவேற்பு அறை, கழிப்பறை வசதி, குடிநீர் வசதி மற்றும் சாமான்கள் பாதுகாப்பு அறை போன்ற அடிப்படை வசதிகளை கருத்திற்கொண்டு படகு குழாம் அமைக்கும் பணிக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து அனுப்பி வைக்க சுற்றுலா அலுவலர், சுற்றுலாத் | 39) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | துறை திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண் 569/ATO/2012 நாள் 07.01.2013 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு திட்டங்கள் செயலாக்கம் குறித்து ஆய்வு கூட்ட நடவடிக்கை கடிதம் எண் வ7/2339/2012 நாள் 11.01.2013இல் தொடர் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பேரில் தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.56.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** திருத்திய மதிப்பீட்டினை மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி பணிக்கு சுற்றுலாத்துறை மூலம் அரசு மான்யம் பெற்று செயல்படுத்த அனுமதிக்கலாம்.<br>இ1/3100/2012 | |
| | 10. இம்மாநகராட்சி இயக்குதல் மற்றும் பேணுதல் நிதி (2012–13) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள "Laying of Ettayapuram Road OHT Pumping main from Rajaji Park Pumping station to KVK Nagar Bridge'' பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 21951/பி1/12 நாள் 25.09.2012ன்படி நிர்வாக அனுமதியும், மாமன்ற தீர்மானம் எண் 223 நாள் 29.11.2012ன்படி ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பணிக்கு 31.01.2013 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><br>1) மகாலெட்சுமி அன்கோ, கோயம்புத்தூர்<br>2) கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ், கோயம்புத்தூர்.<br><br>மேற்படி ஒப்பந்தபுள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, தொழில்நுட்ப தகுதியுடைய ஒரு ஒப்பந்தப்புள்ளியான "கிளாசிக் இன்ஜினியரிங் என்டர்பிரைசஸ்'' நிறுவனத்தின் விலைப்புள்ளி 13.02.2013 அன்று திறக்கப்பட்டது. அதன் ஒப்புநோக்கு பட்டியல்<br><br>1) கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் – மதிப்பீட்டை விட 4.16% அதிகம்<br><br>மேற்படி, கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தினரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில், அவர் கடிதம் மூலம் 15.02.2013 அன்று விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதனடிப்படையில் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>மேற்படி பணி குடிநீர் அவசர பணியாக இருப்பதால் பொறியியல் கையேடு எண் 2.7.2ன்படி மேற்படி பணிக்குப் பெறப்பட்ட, கிளாசிக் இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தினர் மதிப்பீட்டை விட 3.94% அதிகம் (ரூ.41,33,363.50) கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>மதிப்பீடு எண் 338/12–13 | 40) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 11 சிப்பம் – 1<br>இம்மாநகராட்சி இயக்குதல் மற்றும் பேணுதல் 2012–13 திட்டத்தின் கீழ் மாநகராட்சி துப்புரவு பணியாளர் குடியிருப்பு பணிக்கு 23.01.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டன. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு, | 41) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

1) திரு. ஐ. ஜெயசீலன், தூத்துக்குடி

2) திரு. எஸ். இன்னாசிமுத்து, தூத்துக்குடி

மேற்படி ஒப்பந்தபுள்ளிகளின் தொழில்நுட்ப ரீதியாக சரிபார்க்கப்பட்ட போது ஒப்பந்தகாரர் திரு. ஐ.ஜெயசீலன் அவர்கள் சரியான ஆவணங்கள் கொடுக்காததால் தள்ளுபடி செய்யப்படுகிறது. மீதமுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் விலை விகிதம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

1) திரு. எஸ். இன்னாசிமுத்து – மதிப்பீட்டை விட 9.27% அதிகம் (ரூ.13271880/–

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 9.27% அதிகம் கொடுக்கப்பட்டதால் ஒப்பந்தகாரரிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டது. அதில் ஒப்பந்தகாரர் திரு. எஸ்.இன்னாசிமுத்து மதிப்பீட்டை விட 4.99% அதிகம் கொடுத்துள்ளார். மேலும் பொறியியல் கையேடு Chapter II எண் 2.7.2ல் உள்ளபடி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டை விட 5% அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டுமான பொருள்கள் விலை அதிகமாக இருப்பதாலும் ஒப்பந்தகாரரின் விலை குறிப்பின்படி (மதிப்பீட்டை விட 4.99% அதிகம் ரூ.12751855/–) மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். கூடுதல செலவினம் பொது நிதியில் செலவு செய்யலாம்.

இ1/20352/12

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : 25.02.2013

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி